மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 09 சனிக்கிழமை 26.08.2023 அதிர்வு 26

# 9 வயது சிறுமியை சாகடித்த விபத்து!



**திருகோணமலையில் சோகம்**

திருகோணமலை உட்துறைமுக வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது வான் மோதியதில் வானில்

04

# வீட்டில் இருந்தவர்களைக் கட்டி வைத்து கத்தியைக் காட்டி கொள்ளையிட முயற்சி





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் அதிகாலை வேளை வீட்டுக்குள் அத்துமீறி நுழைத்து வீட்டில் இருந்தவர்களைக் கட்டி வைத்து கத்தியைக் காட்டி கொள்ளையிட முயற்சித்த கும்பல் வீட்டார் குரல் எழுப்பியமையால் தப்பியோடியுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு - பாற்பண்ணைப் பகுதியில் இன்று அதிகாலை 2 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

பாற்பண்ணைப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் நள்ளிரவு நேரம்

04

# அரசியல் களத்தில் அதிரடி மாற்றங்கள்

## விரைவில் என்கிறார் மைத்திரிபால



கொழும்பு,ஓகஸ்ட்26

"இலங்கை அரசியல் களத்தில் விரைவில் அதிரடி மாற்றங்கள் காத்திருக்கின்றன. நாம் பக்கம் நின்றே தீர்க்கமான முடிவுகளை எடுப்போம்."

- இவ்வாறு பரபரப்புத் தகவலை வெளியிட்டார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

04



# மயோன் முஸ்தபா காலமானார்

(கே.எ.ஹமீட்)

முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சரான மயோன் முஸ்தபா என அழைக்கப்படும் எம்.எம்.எம். முஸ்தபா (வயது 71) இன்று அதிகாலை கொழும்பில் உள்ள அவரது வீட்டில் காலமானார்.

ஒரு கணக்காளரான இவர், 1994 - 1999 காலப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளராக அரசியலுக்குள் பிரவேசித்தார்.

2001 - 2004 மற்றும் 2004 - 2010 காலப் பகுதியில்

04

# இன, மத வாதக் கருத்துக்களால் தமிழரை தாக்குவது நாட்டுக்குத்தான் பேரவமானம்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ விசனத்துடன் தெரிவிப்பு



"கொடூரப் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்கள், சர்வதேசத்திடம் நீதி வேண்டி நிற்கின்ற வேளையில் அவர்களை இனவாத, மதவாதக் கருத்துக்களால் தாக்குவது நாட்டுக்குத்தான் அவமானம்."

04



# இந்த ஆட்சியில் சஜித் பிரதமர் பதவி ஏற்கார்!

## ஹெக்டர் அப்புஹாமி எம்.பி. திட்டவட்டம்

"தற்போதைய ஆட்சியின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஒரு போதும் பிரதமர் பதவியை ஏற்கமாட்டார்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர் எனவும், சஜித் பிரேமதாஸவுக்குப் பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளது எனவும் வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த ஆட்சியின் கீழ் இவ்வாறு எதுவும் நடக்காது. சஜித்தைக்

04



# ரயில் மிதிபலகையில் நின்று பயணித்தவர் விபத்தில் காயம்

ரயில் மிதிபலகையில் நின்று பயணித்த நபர் ஒருவர் ஒளி சமிக்ஞை கம்பத்துடன் மோதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை (25) பிற்பகல் களுத்துறை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மருதானையில் இருந்து ஹிக்கடுவை நோக்கி பயணித்த அதிவேக ரயிலின் மிதிபலகையில் நின்று பயணித்த



போதே களுத்துறை பகுதியில் உள்ள ஒளி சமிக்ஞை கம்பத்துடன் குறித்த நபர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

ஒளி சமிக்ஞை கம்பத்துடன் மோதிய நபர் சுமார் 30 மீற்றர் தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த நபர் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படடுள்ளார். அவர் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



# இந்துமத எழுச்சியுடன் நடைபெற்ற காரைதீவு-மண்டூர் திருத்தல யாத்திரை



**(வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவில் இருந்து மண்டூர் முருகன் ஆலயம் வரையான வருடாந்த திருத்தல பாதயாத்திரை இந்துமத எழுச்சியுடன் இன்று (26) சனிக்கிழமை நடைபெற்றது.

முன்னொரு போதுமில்லாத வகையில் சுமார் ஐயாயிரம் அடியார்கள் உணர்வுடன் கலந்து கொண்டனர்.

காரைதீவு அடியார்களுடன் அட்டப்பள்ளம், திராய்க்கேணி, வீரமுனை,- கல்முனை ஆகிய கிராம மக்களும் கலந்து கொண்டனர்.

முருகப்பெருமான் திருவுருவப் படங்கள் தாங்கிய அலங்கரிக்க பட்ட ஏழு உழவு இயந்திரங்கள் முன்னதாக செல்ல, அடியார்கள் அரோகரா கோசம் விண்ணைப்பிளக்க, நந்திக் கொடி தாங்கியவாறு பஜனைப் பாடல்கள் சகிதம் பாதயாத்திரை நகர்ந்தது.

சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் அடியார்கள் வரிசையில் சென்றமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

இன்று சனிக்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் மாவடி ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட பாதயாத்திரை ஐந்து மணியளவில் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்தது. அங்கிருந்து கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம், ஸ்ரீ முருகன் ஆலயத்தை அடைந்து நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு , கிட்டங்கி, சவளக்கடை , நாவிதன்வெளி, வேப்பயடி, தம்பலவத்தை சென்று மண்டூர் ஆலயத்தை சென்றடைந்தது. இடையிலேயே ஆலயத்தவர்கள், அன்பர்கள் நீராகாரம் வழங்கினர்.

ஆலயத்தை சென்றடைந்ததும் அங்கு காரைதீவு அடியார்கள் பஜனை பாடி பூஜையில் கலந்து கொண்டனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு பின்னர் மிகவும் கூடுதலான அடியார்கள் பங்கேற்ற பாதயாத்திரை என்பதால் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

காரைதீவு இந்து சமய விருத்தி சங்கம் ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா சிறார்களின் கடற்கரை விளையாட்டு





(அ.அஸ்வர்)

திருகோணமலை மாவட்ட கிண்ணியா அல்-மக்தூமஸ் சிறுவர் செயற்பாட்டுக் கல்லூரியால் கடற்கரை மணலில் கற்பனை வெளிப்பாடு எனும் முன்பள்ளி சிறார்களுக்கான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வகுப்பறை திணிப்புகள் இல்லாது செயற்பாடுகளூடாக சிறார்களது விருப்புக்கு ஏற்ப சிறுவர் பாட நெறிகளை வடிவமைத்து வழங்குவதில் இக்கல்லூரி நிர்வாகம் உழைத்து வருகிறது.

இதன்படி முன்பள்ளி சிறார்களுக்கு மேற்படி நிகழ்ச்சியொன்று கிண்ணியா கடலூர் கோயிலுக்கு முன்னால் உருவாகிவரும் புதிய பீச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் சிறார்களது ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் வகையில் திட்டமிடல், நேர்த்தி, கட்டமைப்பு மற்றும் கற்பனை வளம் போன்ற அடிப்படைகளை மையமாக வைத்து மதிப்பீடுகள் செய்யப்பட்டன.

இதன் மதிப்பீட்டாளர்களாக கிண்ணியா வலயக் கல்வி பணியக வளவாளர் கே.முனவ்வர்கான், நிப்க் மேன் பவர் கன்சல்டன்சி பிரைவட் லிமிட்டட் நிறுவன பணிப்பாளர் என்.இஜாஸ் அஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறார்களது அபரிமிதமான திறமைகள் அவர்களது முயற்சியால் வெளிப்படுத்தப்படும் வகையில் கல்லூரி ஸ்தாபகர் எம்.எஸ். முஹம்மது இக்ரிமா தலைமையிலான ஆசிரியர் குழுவினர் செயற்பட்டமையைப் பலரும் பாராட்டி வருகின்றனர்.

# புத்தளம், சிலாபம் வலய பாடசாலைகளில் திறன்பலகைகள் மூலம் கற்றல் செயற்பாடு









வடமேல் மாகாணத்திலுள்ள புத்தளம் மற்றும் சிலாபம் கல்வி வலயங்களில் முதல் கட்டமாக 14 பாடசாலைகளில் திறன் பலகைகள் பொருத்தப்பட்ட திறன் வகுப்பறைகளில் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திறன் பலகைகளை வழங்கி திறன் வகுப்பறைகளை ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகளை அமெரிக்க நிறுவனமான ஐ.எம்.எச்.ஓ. மற்றும் லண்டன் ரட்ணம் நிதியம் ஆகியன இணைந்து மேற்கொண்டுள்ளன.

உரிய பாடசாலை ஆசிரியர்களுக்கு மூன்று நாள்கள் கொண்ட பயிற்சிகளையும் திறமையான வளவாளர்களைக் கொண்டு வழங்கியிருந்தன.

திறன் வகுப்பறைகளை திறந்து வைக்கும் ஆரம்ப வைபவங்களில் புத்தளம் கல்வி வலயத்தின் தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கான பணிப்பாளர் கமலேந்திரன், சிலாபம் கல்வி வலயத்தின் தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கான பணிப்பாளர் திருமதி ஹனித்தாகமலேந்திரன்,மற்றும்சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் அருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அடுத்த கட்டமாக மேலும் 6 பாடசாலைகள் பரிந்துரை செய்யப்பட்டு திறன் வகுப்பறைகளை திறந்து வைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**9 வயது சிறுமியை...**

பயணித்த நோயாளியும், மோட்டார் சைக்கிளில் பயணித்த மாணவியும் உயிரிழந்துள்ளனர். மற்றும் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளான கவிசாலினி (வயது 9)ஆகிய இருவரும் படுகாய மடைந்துள்ளமையுடன் மருமகளான எட்றிக் செரலினா (வயது 9) என்ற மாணவி உயிரிழந்துள்ளார். இவர் திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மாணவியாவார்.

இதேசமயம், சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அந்த வானில் அழைத்து வரப்பட்ட நோயாளியான தாய் ஒருவரும் உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்துச்சம்பவம்நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பிரத்தியேக வகுப்பை முடித்த மகள் மற்றும் மருமகளை ஏற்றிக் கொண்டு உட்துறைமுக வீதியூடாக பயணித்த பெண்ணின் மோட்டார் சைக்கிள் மீது சீனக்குடாவில் இருந்து வைத்தியசாலைக்கு நோயாளி ஒவரை அவசரமாகச் ஏற்றிச் சென்ற வான் மோதியதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

விபத்து தொடர்பில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

**வீட்டில் இருந்தவர்களை...**

வீட்டின் ஓட்டைப் பிரித்து உள் இறங்கிய மூவர் அடங்கிய முகமூடிக் கொள்ளைக் கும்பல், வீட்டில் இருந்தவர்களைக் கட்டி வைத்து கழுத்தில் கத்தியை வைத்து "நகைகள் எங்கே?" என மிரட்டி கொள்ளையிட முயற்சித்துள்ளது.

அவ்வேளை வீட்டின் உரிமையாளர் அபாயக் குரல் எழுப்பியதையடுத்து, அயல் வீட்டார்கள் தமது மின் விளக்குகளை ஒளிர விட்டனர். அதனை அவதானித்த கொள்ளைக் கும்பல், தாம் கொண்டு வந்திருந்த பெரிய கத்தி ஒன்றையும் வீட்டில் கைவிட்டு விட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் இந்த வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் உள்ள தேவாலயம் ஒன்றினுள் புகுந்த முகமூடிக் கொள்ளைக் கும்பல், பாதிரியாரின் கழுத்தில் கத்தியை வைத்து, அவரின் 30 ஆயிரம் ரூபா பணம் மற்றும் தேவாலய உண்டியலில் இருந்த 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**இன, மத வாத...**

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:–

"அரசில் இருப்பவர்கள் அனைவரும் நூறு வீதம் நல்லவர்கள் அல்லர். அதில் தீய சிந்தனையுடன் செயற்படுவர்களும் உள்ளனர் என்பதை மறுக்க முடியாது.

ஒரு பொருளைக் கொள்வனவு செய்யும்போது அது நூறு வீதம் நல்லதாக இருக்கமாட்டாது. அதில் குறைந்தது பத்து வீதம் கழிவுப் பொருள்கள் அடங்கியிருக்கும். அதுபோல்தான் இந்த அரசும்.

இன ஒற்றுமையை விரும்பாதவர்கள் – மத ஒற்றுமையை விரும்பாதவர்கள் – நல்லிணக்கத்தை விரும்பாதவர்கள்– வாய்க்கு வந்த மாதிரிக் கருத்துக்களை வெளியிடுவார்கள். அவர்கள் தொடர்பில் தமிழர்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

தமிழர்களுக்குச் சம உரிமைகளுடன் அரசியல் தீர்வையும் வழங்க வேண்டும். இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்." – என்றார்

**அரசியல் களத்தில்...**

அவர் மேலும் கூறுகையில் –

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் குழப்பமா? கட்சியின் ஆண்டு விழா திட்டமிட்டவாறு நடைபெறுமா? என ஊடகவியலாளர்கள் பலர் என்னிடம் கேள்விகளைத் தொடுத்து வருகின்றார்கள்.

ஒவ்வொரு கட்சிக்குள்ளும் சிறிய, பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளுக்குக் கட்சிகளின் தலைமைகள் தீர்வுகளைக் காணும். நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர். எனவே, எமது கட்சிக்குள் பிரச்சினைகள் இருந்தால் அதனை நான் தீர்த்து வைப்பேன். வெளியில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

இலங்கை அரசியல் களத்தில் பாரிய குழப்பங்களுக்குச் சதித்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்று எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. கட்சிகளின் உள்வீட்டு விவகாரங்களை ஆராயும் ஊடகவியலாளர்கள் பிரதான அரசியல் களத்தில் நடக்கும் – நடக்கப் போகும் – விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அரசியல் களத்தில் விரைவில் அதிரடி மாற்றங்கள் காத்திருக்கின்றன என்று அறியமுடிகின்றது. எனினும், நாம் பக்கம் நின்றே தீர்க்கமான முடிவுகளை எடுப்போம்." – என்றார்.

**இந்த ஆட்சியில்...**

கைவிட்டுச் செல்வதற்கு நாம் தயாரில்லை. அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் சில நல்ல திட்டங்களை வரவேற்கின்றோம். அதற்காக அரசுக்கு ஆதரவு என அர்த்தப்படாது. எதிரணி பலமாக வுள்ளது. எதிர்காலத்தில் மேலும் பலமடையும்.

ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கான முயற்சியில்தான் தற்போதைய அரசு ஈடுபட்டுள்ளது. 13 பற்றி பேசப்படுவதும் இதன் ஓர் அங்கமாகும்." – என்றார்.

**மயோன் முஸ்தபா...**

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இவர், 2007 – 2010 காலப் பகுதியில் உயர் கல்வி பிரதியமைச்சராக கடமையாற்றியிருந்தார்.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஒரு சுயாதீன வேட்பாளராக களமிறங்கிய அவர், 3,134 வாக்குகளைப் பெற்றார்.

அத்தேர்தலில் போட்டியிட்ட 22 பேரில் 17ஆவது இடத்தைப் பிடித்தார்.

சரத் பொன்சேகா உள்ளிட்டோர் போட்டியிட்ட இந்தத் தேர்தலில் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக பணியாற்றிய அவர், தேசிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மொஹமட் முஸம்மிலுக்கு 42 மில்லியன் ரூபா லஞ்சம் வழங்க முன்வந்தார் எனக் குற்றம்சாட்டப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் 13 வருடங்களாக இடம்பெற்ற வழக்கு, கடந்த 2023 பெப்ரவரி 18ஆம் திகதி நிறைவுக்கு வந்த நிலையில், அந்த வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் அவருக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமையோடு, 7 வருடங்களுக்கு அவரது சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தமையும் அவரது அரசியல் வாழ்க்கையில் ஒரு கரும்புள்ளியாக கருதப்படுகின்றது.

ஆயினும் ஆலுமுறுடே எனும் கல்வி நிறுவனத்தை நடத்தி வந்த இவர், அம்பாறை மாவட்டத்தின் கல்வி, சமூக, சமய விடயங்களில் மக்களுக்கு பெரும் சேவைகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மன்னார் முள்ளிக்கண்டலில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று

**(மன்னார் நிருபர்)**

மன்னார் அடம்பன் முள்ளிக்கண்டல் பகுதியில் வியாழக்கிழமை (24) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று இடம்பெறுகின்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இரண்டு குடும்பஸ்தர்களதும் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இறுதிக் கிரிகைகள் இன்று இடம்பெறுகின்றன.

துப்பாக்கிச் சூட்டில் மன்னார் நொச்சிக் குளம் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் அருந்தவராஜா (வயது-42) 3 பிள்ளைகளின் தந்தை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தை சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது-56) 5 பிள்ளைகளின் தந்தை ஆகிய இரு குடும்பஸ்தர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடம் மன்னார் நொச்சிக் குளம் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நொச்சி குளத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் அருந்தவராஜா என்ற குடும்பஸ்தரும் அவரது வயலில் வேலை செய்யச் சென்ற சன்னார் கிராமத்தை சேர்ந்த கணபதி காளிமுத்து என்பவருமே இவ்வாறு சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது, தீராப் பிணி போலும்!

'பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்' - என்பார்கள். பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிக ளால் பாதிக்கப்பட்டிருக்கும் நமது நாட்டின் நிலை மையும் அத்தகையதுதான்.

கற்றறிந்தோர், துறைசார் வல்லநர்கள், நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றமையால் தனது வள ஆளணிகளை இழந்து வருகின்றது நாடு. ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் துவண்டு போய்க் கிடக்கும் நாட்டுக்கு இந்தப் பின்னடைவு மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும்.

குறிப்பாக மருத்துவத்துறையில் இந்தப் பின்னடைவு - பாதிப்பு - மோசமான விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது எனத் தொடர்ந்து எச்சரிக்கைகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

ஏற்கனவே மருத்துவர்கள் - குறிப்பாக விசேட வைத்தி யர்கள், நிபுணர்கள்- பலர் நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். இன்னும் பல நூற்றுக்கணக்கானோர் வெளியேறத் தயாராகி வருகின்றனர் என்பது அதிர வைக்கும் உண்மை.

மருத்துவத்துறையில்கலாநிதிப்பட்டப்பரீட்சையில் சித்தி பெற்ற 785 மருத்துவர்கள், தங்களது அந்தக் கல்வியை ஒட்டிய வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக இப்போது தயாராகி வருகின்றனர். மேற்படிப்புக்காக என்பதால் - அவர்களது கலாநிதி பட்டத்துக்கான பயிற்சி என்பதால் - அவர்களின் அந்த வெளிநாட்டுப் பயணங்களைத் தடுக்க முடியாது.

இதே சமயம், இந்த வகையில் மேலும் 822 மருத்து வர்கள் வெளிநாடுகளில் தங்கள் பயிற்சிகளை தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களும் இனிப் போக தயாராகின்ற 785 மருத்து வர்களும் தத்தமது பயிற்சிகளை முடித்துக் கொண்டு குறிப்பிட்டபடி நாடு மீளுவார்களா - திரும்ப பணி யில் இணைவார்களா - என்பவை எல்லாம் விடை கூற சந்தேகம் தரும் வினாக்கள்.

இந்தச் சீத்துவதில் மேலும் 632 பேர் தங்களது மருத்துவக் கலாநிதிப் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

முன்னைய அணிகளைத் தொடர்ந்து, தங்களது பரீட்சை முடிந்ததும் இவர்களும் வெளிநாட்டுப் பயிற்சிக்குப் புறப்பட்டு விடுவார்கள்.

இப்படி அணி அணியாக, 700 அல்லது 800 மருத்து வர்கள் மேற்கல்வி என்ற பெயரில் வெளிநாட்டுக்குத் தொடர்ந்து பயணமாகும் சூழலில், நாட்டில் உள்ள தற்போதைய இக்கட்டில் - பொருளாதார நெருக்கடி யில் - மருத்துவ மற்றும் சுகாதார சேவைப் பாதிப்பு கள் போன்றவற்றுக்கு மத்தியில் - அவர்களில் பெரும்பாலானோர் நாடு திரும்புவதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

கடந்த ஆண்டில் இலங்கையில் மொத்தம் 22 ஆயி ரம் மருத்துவர்களும் இரண்டாயிரத்து 800 விசேட மருத்துவ நிபுணர்களும் சேவையில் இருந்தனர்.

இந்த எண்ணிக்கையில் புதிதாக மருத்துவர்களா கச் சேர்பவர்களை விட, வெளிநாட்டுக்குச் செல்லு வோர், நாட்டை விட்டு வெளியேறுவோர் மற்றும் சேவையில் இருந்து விலகுவோர். ஓய்வு பெறு வோர் போன்றவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று கூறப்படுகிறது.

இந்தப் பின்புலத்தில் மருத்துவத்துறை நெருக்கடி யில் இருந்து நாடு எப்படி மீளப் போகின்றது? இது தீராப் பிணி போல நாட்டையும் மருத்துவத்துறையையும் பிடித்திருக்கும் சிக்கல்.

# பிரத்தியேக வகுப்புக்கள் தொடர்பாக அக்கரைப்பற்று மக்களுக்கு அறிவித்தல்

(கே. எ. ஹமீட் )



பிரத்தியேக வகுப்புக்கள் தொடர்பாக அக்கரைப்பற்று மக்களுக்கு விசேட அறிவித் தல்கள் விடுக்கப்பட்டுள் ளன.

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமை வாக இந்த அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

வலயக் கல்விப் பணி மனை, சுகாதார பணிமனை, மாநகர சபை, அனைத்து நிறுவனங்களின் சம்மேள னம், பள்ளிவாசல் பிரதி நிதிகள் மற்றும் பிரத்தி யேக கல்வி நிலையங்க ளின் முகாமையாளர்கள், பாடசாலை அதிபர்கள் பங்கு பற்றுதலோடு பிரதேச செய லாளரின் தலைமையில் இடம்பெற்ற பிரத்தியேக வகுப்புக்கள் தொடர்பான கலந்துரையாடலில் மாண வர்களின் நலன்கள் குறித்து பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அதில் தெரிவிக்கப்பட் டுள்ளவை வருமாறு–

1. தரம் 6–11 வரையான மாணவர்களுக்கு மாலை 6 மணிக்கு பிறகு எந்தவித மான பிரத்தியேக வகுப்புக் களையும் நடத்தாமல் இருத் தல். உயர் தர வகுப்பு மாண வர்களில் கணிதம், விஞ்ஞா னம் போன்ற துறைகளில் கற்கும் மாணவர்களுக்கு மட்டும் மாலை 7 மணி வரை வகுப்புக்களை நடத்த முடியும்.

2. பெண்பிள்ளைகள் பாடசாலை சீருடையில் மாத்திரம் தனியார் வகுப் புக்களுக்கு வருதல்.

3. தரம் 6–11 வரை யான மாணவர்களுக்கு ஒரு மாதத்துக்கு ஒரு பாடம் தொடர்பாக 8 மணித்தியா லங்கள் மாத்திரம் ஒதுக்கப் படுதல் வேண்டும்.

4. ஒரு மணித்தியாலயத் துக்கு அதி கூடிய கட்டண மாக 60 ரூபா அறவிடுதல் வேண்டும்.

5.மாநகர சபை மற்றும் சுகாதார பணிமனையால் தர நிர்ணயத்துக்கு உட்பட்ட சொகுசு வசதிகளுடன் நடத் தப்படும் தனியார் நிறுவ னங்கள் மாத்திரம் 70 ரூபாவரை அறவிடலாம்.

6. ஞாயிற்றுக்கிழமை யில் 6–11 வரையான மாண வர்களுக்கு முழு விடுமுறை நாளாக அறிமுகப்படுத்தல். அரச சுற்று நிருபதத்துக்கு அமைவாக இந்த நாளில் அகதியா வகுப்புக்கள் நடத் தப்படுவதுடன் விளையாட்டு பொழுதுபோக்கு மற்றும் மார்க்க விழுமியங்களுக்கு வழி வகுத்துக் கொடுத்தல்.

7.பாடசாலை நேரங்க ளில் எவ்வித பிரத்தியேக வகுப்புக்களையும் நடத் தாமல் இருத்தல்.

8. பிள்ளைகளுக்கு மாலை, இரவு நேரங்களில் வீட்டிலேயே ஆசிரியர்களை வரவழைத்து கற்றல் செயற் பாடுகளில் ஈடுபடுவதை முற்றாகத் தவிர்த்தல்.

9. தரம் 1–3 வரையான மாணவர்களுக்கு எவ்வித பிரத்தியேக வகுப்புக்களும் நடத்தப்படாமல் குர்ஆன் மத்ரஸாவுக்கும் மார்க்க ரீதி யான கல்விக்கும் வாய்ப்ப ளித்தல்.

10.வளப்பற்றாக்குறை யுடைய தனியார் கல்வி நிறு வனங்கள் மாணவர்க ளின் நலன் கருதி உரிய உட்கட்மைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.

இவை மாநகர சபை மற் றும் சுகாதார பணிமனை போன்றவற்றால் பரிசோதிக் கப்படும். இப்பரிசோதனை யில் போதிய வசதிகளை வழங்காது நடத்தப்படும் கல்வி நிலையங்களுக்கு எதிராக உரியநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தீர்மானங்கள் அனைத் தும் 2023 செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் நடை முறைப்படுத்தப்படும். பொற் றோர்கள் குறித்த விடயத் துக்கு ஒத்துழைத்து மாண வர்களின் கல்வி, விளை யாட்டு, ஓய்வு, மார்க்க விழுமி யங்கள், ஒழுக்க மேம்பாடு போன்றவற்றை மேம்படுத் துவதற்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள் கின்றேன்.– என்றுள்ளது.

# சமூகம் போற்றும் பணியாளன் ‘ஐயா மாஸ்ரர்’



எளிமையும் அமைதியும் நிறைந்த உருவம், புன்னகைக்குள் மொத்த ஆளுமையையும் புதைத்து வைத்த தோற்றம், நேர்த்திமிகு உழைப்பின் வடிவம், அதுதான் ‘ஐயா மாஸ்ரர்’ என எல்லோராலும் அறியப்படும் பாலசுப்பிர மணியம் சண்முகம். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராக நிறைந்த சேவைபுரிந்தவர். சங்க ரத்தை கரந்தை குளவத்தை முருகன் ஆலயத்தின் தொண்டனாக, பரிபால கர்களில் முக்கிய தூணாக விளங்கி, ஆலய வளர்ச்சியிலும் ஆலயத்தினூ டான கிராம ஆன்மீக எழுச்சியிலும் பங்குதாரராக இருப்பவர்ளூ கிராம இளைஞர்களின் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் திகழ்பவர். நாடுவோர் தேவை அறிந்து உதவும் இயல்பாளர் எனப் பல்வகை வகிபாகங்களை உடைய வராகத் திகழ்பவர் இவர்.

இதனால் சங்கரத்தை, வட்டுக் கோட்டை மக்களின் நன்மதிப்பை வென்றெடுத்தவர். பா. சண்முகம் அவர் களின் கல்வி, சமய, சமூகப் பணிகளைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் சங் கரத்தைக் கிராம மக்களும் ஆசிரியரின் பழைய மாணவர்களும் இணைந்து இன்று 26ஆம் திகதி ‘பணிநயப்பு விழா’ எடுக்கவிருப்பது சிறப்பானது.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, ஐயாவின் பிரதான சேவை மையமாகும். இருபத்தைந்து ஆண்டுகள் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக எனப் பலநிலைகளில் கல்லூரியில் பணியாற்றி, பல மாணவர்களை நற் பிரஜைகளாக உருவாக்குவதில் பிர தான பங்கு வகித்தவர். மாணவர்கள் பொதுவாகப் பாகற்காயாகக் கருதும் கணித பாடத்தைச் சக்கரைப் பாகு போல இதமாக்கிக் கற்பிக்கும் நுட்பம் பலரது வாழ்வில் ஒளியேற்றியிருக்கிறது. இதனாலேயே மாணவர்கள் இவரின் பால் இலகுவாக ஈர்க்கப்பட்டார்கள். பாடசாலைக்குப் புறம்பாக சங்கரத்தை யில் பிரத்தியேக கணித வகுப்பை நடத்திய ஆசியரிடம் பல பாடசாலை மாணவர்களும் கற்றுப் பயன்பெற்றி ருக்கிறார்கள். அந்த வகுப்பில் கற்று, அவரது கற்பித்தல் திறனை நுகர்ந்து சிலிர்த்த அனுபவம் எனக்கு உண்டு. கற்றல் கற்பித்தலில் மட்டுமன்றி மாண வர்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு, இயல்பாகவும் இலகுவாகவும் அவற்றைத் தீர்த்துவிடுவதிலும் பதின்ம வயது மாணவர்களை நுட்பமாகக் கையாண்டுவழிநடத்துவதிலும்ஐயாவின் திறமை அலாதியானது. சக ஆசிரியர் களோடும் அதிபரோடும் மட்டுமன்றி பாட சாலைச் சமூகத்தினரோடும் நல்லுறவு களைக் கட்டியெழுப்பியவராக விளங்கிய ‘ஐயா மாஸ்ரர்’. மேலதிகாரிகளின் மதிப் பையும் பெற்றிருந்தார்.

அதேவேளை தனது எண்ணங்களை யும் விருப்பங்களையும் உரியவாறு முன்வைத்து அவற்றை நிறைவேற்றிக் கொள்வதில் வல்லவராகவும் இருந்தார். இவ்வாறான இவரது முழுமையான ஆசிரியத்துவம் வியப்பைத் தருவதாகும்.

வட்டு. மத்திய கல்லூரியாகத் திகழும் பாடசாலை 2000ஆம் ஆண்டுவரை திருஞானசம்பந்த வித்தியாசாலை என்ற பெயருடனேயே விளங்கிவந்தது. தரம் 2 பாடசாலையாக இருந்த மேற்படி பாடசாலையை க.பொ.த. (உயர்தர) வகுப்புகளை நடத்தும் தரம் 1 சீ பாட சாலையாகத் தரம் உயர்த்தவும் வட்டு. மத்திய கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யவும் கல்லூரி அதிபரும் வட்டு. இந்து வாலிபர் சங்கமும் கல்லூரிச் சமூகமும் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அந்நாட்களில் அதிபரின் வலது கரமாகச் செயற்பட்டவர். மாஸ்ரரின்’ வியர்வைக்கும் உழைப் புக்கும் இருந்த பங்கு நிராகரிக்க முடியாதது. வட்டு. மத்திய கல்லூரியில் மூன்று அதிபர்களின் கீழ் பணியாற்றிய ‘ஐயா மாஸ்ரர்’ அவர்களது பணிகளின் முள்ளந்தண்டாகச் செயற்பட்டார். வட்டு. மத்திய கல்லூரியின் பொற்காலத்தின் பங்காளி.

சங்கரத்தை கரந்தை குளவத்தை முருகன் கோயிலின் வளர்ச்சியிலும் அவ்வாலயத்தினூடாக முன்னெடுக்கப் படும் ஆன்மீகச் செயற்பாடுகளிலும் ஐயா பிரதானமாகப் பங்கெடுத்து வருகின்றார். ஆலயத்தில் அறநெறிப் பாடசாலை ஒன்றை நிறுவுவதிலும் செயற்படுத்துவதிலும் ஐயா கிராமத்–தவர்களோடு இணைந்து உழைத்தார். அதன் மூலம் கிராம இளைய சமூகத் தினர் மத்தியில் ஆன்மீக அறிவைப் பரப்புவதிலும் விழுமியப் பண்பு–களை மேம்படுத்துவதிலும் பங்களிக்க முடிந்தது.

எல்லோரோடும் இனிமையாகப் பழகும் இயல்பும் தேவையறிந்து உதவும் மனப்பாங்கும் பலராலும் நேசிக்கப்படும் ஒருவராகத் திகழ்கிறார்.

சிவகுருநாதன் கேசவன்
விரிவுரையாளர்,
சியன தேசிய கல்வியியற் கல்லூரி





க.கிருபாகரன்,
கல்லடி.




# தென்றலின் வாசனை பரவட்டும்!

தென்றல் இதழின் ஆரம்பம் 06.04.2008 ஆகும். இதனது அகவை பதினைந்தைக் கடந்து தற்போது, பதினைந்தாவது அகவையில் புகுந்துள்ளது. அத்தோடு அறுபதாவது இதழை இன்று வையகமதில் உங்கள் கரங்களில் தவழ விட்டிருக்கிறது. இது ஒரு நிகரற்ற சாதனை. ஒரு விஷயத்தை மிக இலகுவாகச் செய்து விடுவோம் என அநேகர் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் ஆரம்பத்திலேயே களைத்து, ஒதுங்கி விடுவது உண்டு. இலக்கியம் சார்ந்த இதழ்கள் வெற்றி நடை போடுவது சந்தோஷமான விஷயம்.

இது விடயத்தில் "தென்றலின்" ஆசிரியரும், வெளியீட்டாளருமான உயர்திரு கதிரேசபிள்ளை கிருபாகரன், அவரது இல்லத் தலைவி திருமதி கவிதா கிருபாகரன் அவர்களின் மாறாத உழைப்புடன் செம்மையாகத் "தென்றலுடன்" தங்களை அர்ப்பணிப்புச் செய்தமையை இலக்கிய உலகம் பாராட்டுகிறது.

அதேசமயம் "தென்றலின்" ஆசிரியர் குழுமத்தினரின் உழைப்பும் மகத்தானது. அந்த வகையில் ஆசிரியர் குழுவில் கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை, கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம், கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை, திருமதி கவிதா கிருபாகரன் மற்றும் செல்வி த. செல்வராணி பணியாற்றுகின்றனர். அத்துடன் ஓவியராக செல்வி சி.புரவர்த்தனியும் தனது பங்களிப்பை உரிய வகையில் வெளிப்படுத்தி வருகின்றார்.

இவர்களின் இலக்கிய சேவைக்கும், "தென்றலுடன்" இணைந்த வாசகர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். தமிழ் இலக்கியம் தாரணியில் உயர்ந்தது. மிகவும் பழைமை உடையது.

மேலும் "தென்றலின்" ஆசிரியர் பற்றிச் சில விஷயங்களைக் குறிப்பிட்டேயாக வேண்டும். கதிரேசபிள்ளை கிருபாகரன், அவரது மனைவி இருவருமே ஆசான்கள். இவர்கள் இருவரின் ஆசிரியப் பணியும், இலக்கியப் பணியும் ஒன்றிவிட்டது.

"தென்றல்" சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளைகிருபாகரன் இளமையிலிருந்தே பத்திரிகைத்துறையுடன் இணைந்தவர். செய்தியாளராக 2000 ஆண்டிலிருந்து கடமைபுரிகின்ற இவர், மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தால் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர்களுக்கான ஆறு மாதகாலப் பயிற்சியினைப் பூர்த்தி செய்தவருமாவார். இவர்கள் இலக்கியக் குழுவில் மூத்த பத்திரிகையாளரும், மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த கொண்டல், விடிவானம், தினக்கதிர் பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியருமான வீ.சு.கதிர்காமத்தம்பி மற்றும் முதுபெரும் எழுத்தாளர் ,ரா.நாகலிங்கம்(அன்புமணி) ஆகியோர் ஆலோசகர்களாகப் பணிபுரிந்துள்ளனர். கே.வாமதேவன், கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம், திருமதி ஸ்ரீதேவி சங்கர், கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை, திருமதி கவிதா கிருபாகரன் ஆகியோரின் முயற்சியுடன், 40 பக்கங்களுடனும், 150 பிரதிகளுடனும் ஆரம்பமான "தென்றல்" 24.09.2011 இல் 530 பிரதிகளுக்கு மேல் வளர்ச்சி கண்டது.

தற்போது இலங்கையில் மட்டுமல்ல, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் தென்னிந்தியாவிலும் வாசகர்களால் ஈர்க்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம் ஊடக சேவைமற்றும்கலை,இலக்கியப்பணியைப் பாராட்டி, அமரர்வீ.சு.கதிர்காமத்தம்பியின் ஞாபகார்த்த விருதையும், 2011 ஆம் ஆண்டு உலகத் தமிழ் சிற்றிதழ் சங்க மாநாடு கொழும்பு மாநகரில் இடம்பெற்ற போது, அதில் வைத்து மணவாளர் இலக்கிய விருதையும், 2014 ஆம் ஆண்டில் அகிலன் பவுண்டேசன்

(09ஆம் பக்கம் பார்க்க)

---

"தென்றல்" சஞ்சிகையின் அறுபதாவது மலர் வெளியீடு மற்றும் நாடாளாவிய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது கலைஞர் கௌரவிப்பு "தென்றல்" சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரன் தலைமையில் 02.09.2023 சனிக்கிழமை காலை 9 மணிக்கு மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம் பெறுகிறது. இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபாலரத்தினமும், சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்தும் கலந்து கொள்கின்றனர். இந்நிகழ்வில் வெளியிடப்படவுள்ள அறுபதாவது மலரின் முதல் பிரதியினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும், கொடை வள்ளலுமான சைவப்புலவர் விநாயக மூர்த்தி றஞ்சிதமூர்த்தி பெற்றுக் கொள்கிறார்.

---

**தென்றலே வாழியவே!**

**மட்டு நகரிலிருந்து பல்வேறு தடைகளைத் தாண்டி, எடுத்த கருமத்தை இடை நடுவில் விடாது சாதனைச் சிகரத்தில் அடியெடுத்து வைத்துள்ள "தென்றலின்" வெற்றிப் பயணத்தில் நானும் ஆரம்ப காலத்தில் பயணித்தவள் என்ற வகையில் பெருமை கொள்கிறேன். இவ்வெற்றிப் பயணம் 70, 80, 90, 100 எனத் தொடர இலங்கையில் வாழ்வோர் மட்டுமன்றி, கடல் கடந்து வாழும் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது ஆதரவை நல்கிட வேண்டுமென்ற உருக்கமான வேண்டுதலைச் "தென்றலின்"- "60" ஆவது இதழ் வெளியீடு, 50 கலைஞர் கௌரவிப்பு நிகழ்வை முன்னிட்டுத் தெரிவிக்கிறேன்.**

**திருமதி
சோபனாகாந்தி புஸ்பாகர்
("தென்றல்" ஆரம்பகால உறுப்பினர், லண்டன்.)**

## தென்றலின்..

### (08ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனத்தினால் கலை, இலக்கியச் சேவைகளைப் பாராட்டி, இந்திய தயாரிப்பாளரும், நடிகரும், இயக்குனருமான கே.பாரதிராஜாவின் கரங்களால் உயர் விருதையும், 2022 ஆம் ஆண்டு லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் நிறுவனத்தால் திறமைக்கான தேடல் விருதையும், கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களகத்தினால் 2021 ஆம் ஆண்டில் சிறந்த சஞ்சிகையாகத் “தென்றல்” தேர்வானமையும் அவரது முயற்சிக்குச் சான்று பகர்கின்றது எனக் கூறினால் அது மிகையாகாது.

தற்போது 50 பக்கங்களுக்கும் மேற்பட்ட பக்கங்களை உள்ளடக்கித் “தென்றல்” காலாண்டு இதழ் வெளிவருகின்றது. கதிரேசபிள்ளை கிருபாகரன் மேற்படி இதழ்கள் ஒவ்வொன்றும் வெளிவந்தவுடன் எனக்கு அனுப்பி வைப்பார். இவை அனைத்துச் சஞ்சிகைகளும் என்னிடம் உள்ளன. எனவே நான் “தென்றலை” வாசித்துப் பத்திரிகையில் எழுதுவேன். தினக்குரல் இந்த விமர்சனங்களை தொடர்ந்து வெளியிட்டமைக்கு எனது நன்றிகள்.

“தென்றலின்” அமைப்பு கவர்ச்சிகரமானது. வண்ணமயமான அட்டைப் படத்தில் இலக்கிய, ஊடக, இசைத் துறை விற்பன்னர்களின் வண்ணப் புகைப்படங்கள் அழகு சேர்க்கும். அத் துடன் கல்வித்துறை சார்ந்த பாடசாலைகளின் நிகழ்வுகள், பாராட்டு விழாக்கள், அரச அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலதரப்பினரைச் சார்ந்தோர்களின் புகைப்படங்கள் ஒவ்வொரு காலாண்டுகளிலும் களம் கண்டு கொண்டிருப்பது கண்கூடு.

இதன்போது “வீசுதென்றல் விருது” வழங்கிக் கௌரவிக்கப்படும் கலைஞர் விபரம் வருமாறு:–

ஆ.மு.சி.வேலழகன் (திருப்பழுகாமம்), மூ.அருளம்பலம்(ஆரையம்பதி), செ.குணரத்தினம் (அமிர்தகழி), கா.சிவலிங்கம் (நாவற்குடா), இ.நல்லையா (களுதாவளை), திருமதி மாலினி அஜந்தன் (யாழ்ப்பாணம்), சீ.கோபாலசிங்கம் (வெல்லாவெளி), திருமதி ஜெகதீஸ்வரி நாதன்(தம்பிலுவில்), மா.திருநாவுக்கரசு (குருக்கள்மடம்), மீரா முகைதீன் ஜமால்தீன் (ஏறாவூர்), திருமதி இந்திராணி புஸ்பராஜா (கல்லடி), பரதன் கந்தசாமி (கல்முனை), திருமதி வேதநாயகி குணநாயகம் (களுதாவளை), தி.பத்மநாதன்(திருப்பழுகாமம்), செ.துரையப்பா (துறைநீலாவணை), பெ.பேரின்பராசா (செட்டிபாளையம்), த.கோபாலகிருஸ்ணன்(காரைதீவு), வீ.வீரசொக்கன்(உடப்பு), தம்பி சாகித் சித்தி பரிதா (சிலாபம்), தி.சத்தியநாதன்(திருப்பழுகாமம்), மி.அருள்மொழி ராஜா (நிலாவெளி) , கவிஞர் ஏறாவூர் தாஹிர்(ஏறாவூர்), எஸ்.இரவீந்திரன் (மட்டக்களப்பு), முகம்மதுலெவ்வை முகம்மது பாறூக் (பாலமுனை), எஸ்.தியாகராஜா(களுதாவளை), க.ரெட்ணையா(கன்னன்குடா) , திருமதி சுந்தரமதி வேதநாயகம்(கல்லடி) , கே.பத்மஶ்ரீ(ஆரையம்பதி), ஆத்மராஜா றூத் சந்திரிக்கா(கோட்டைக்கல்லாறு), ம.ஹறிச்சந்திரா(மட்டக்களப்பு), வா.கிருஷ்ணகுமார் (பெரியகல்லாறு), சீனித்தம்பி தரணீஸ்வராநந்தா (மட்டக்களப்பு), மா.சசிக்குமார் (கன்னன்குடா), அனோஜா பவளேந்திரன் (களுவாஞ்சிகுடி), செல்வி சி.புரவர்த்தனி (குறிஞ்சாமுனை), சிவகுமார் (கல்லடி), செல்வன் ம.புருஷோத்தமன்(கல்லடி), சதாசிவம் மதன் (புதுக்குடியிருப்பு), தங்கராசா இன்பராசா (புதுக்குடியிருப்பு), கிறிஸ்டிராஜ் (கல்லடி), ஏ.எல்.எம்.சலீம் (நிந்தவூர்) , எஸ்.பகீரதன் (மட்டக்களப்பு), உதயகுமார் உதயகாந் (மட்டக்களப்பு), குழந்தைவேல் கோடீஸ்வரன (கிழக்கு, செல்வன் தேவதாசன் லோகவியாசன் (கிழக்கு), குகராசு சுபஜன்(மட்டக்களப்பு), க.பாக்கியராஜா ( ஆரையம்பதி), த.மதியழகன் (மட்டக்களப்பு), மு.விஸ்வநாதன் (களுவாஞ்சிகுடி), வி.றஞ்சிதமூர்த்தி (மட்டக்களப்பு).

“தென்றலின்” எழுத்தாளர்களாக எழுதிக் கொண்டிருப்பவர்களாக ஆறுமுகம் அரசரெத்தினம், பேராசிரியர் செ.யோகராசா, ஆ.மு.சி.வேலழகன், கவிதாயினி ஜெகதீஸ்வரி நாதன், கவிதாயினி வாசுகி குணரத்தினம், மூ.அருளம்பலம், மருதூர் ஜமால்தீன், ஏறாவூர் தாஹிர், ஏ.எல்.எம்.சலீம், மாஸ்டர் சிவலிங்கம், இ.கோபாலபிள்ளை, பேராசிரியர் சபா.ஜெயராசா, பேராசிரியர் மா.செல்வராசா, இ.பாக்கியராசா, பாத்திமா முஹம்மத், தாழை.செல்வநாயகம் போன்றோரைக் குறிப்பிடலாம்.

“தென்றலின்” முதற் பக்கத்தை நோக்கினால் சஞ்சிகை பற்றிய தகவல்கள் காணப்படும். அடுத்து ஆசிரியர் கருத்து, தென்றலின் தேடல், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், புதிய வரவுகள், நீத்தார் நினைவு, வாசகர் நெஞ்சம், நகைச்சுவை, குட்டிக்கதை எனப் பல விடயதானங்களை அடிக்கடி வெளிக் கொண்டுவரும் “தென்றல்” பரந்து விரிந்து ஆலமரம் போல் அகலக் கால் விரித்து செழிப்பாக வளர்ச்சி கண்டுள்ளது.

மேலும் “தென்றலின் தேடல்” மிகவும்முக்கியமானவிரிந்தபகுதியாகும். சாதனை யாளர்கள், விருது பெற்றவர்கள், பொதுநலம் சார்ந்த விடயங்களில் ஈடுபடும் பெரியார்கள், கல்விமான்கள், பேராசிரியர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பல பிரிவில் அடங்கியுள்ளவர்களை அவர்களின் புகைப் படங்களுடன், கட்டுரை வாயிலாகவும், பேட்டி மூலமாகவும் வெளிப்படுத்தி “தென்றல்” உன்னதமான பணியினை இவ்வையகத்தில் ஆற்றிக் கொண்டிருக்கிறது.

காலம் கனியும் போது “தென்றல்” மாதச் சஞ்சிகையாக மலர வேண்டுமென்பதே அனை வரினதும் பேரவா! இனிவரும் சமூகம் மென்மேலும் முன்னேற வேண்டும். கால மாற்றம் உலகை மாற்றும். நல்லதை மட்டுமே செய்ய வேண்டும்.

## தியாகி பொன்.சிவகுமாரின் பிறந்த நாள் நிகழ்வு






தியாகி பொன்.சிவகுமாரின் 73 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இன்று முற்பகல் 10.30 மணியளவில் உரும்பிராயில் உள்ள அன்னாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. பொன். சிவகுமார் நினைவேந்தல் ஏற்பாட்டு குழு உறுப்பினர் எஸ்.செந்தூரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் சிவகுமாரின் சகோதரி சிவகுமாரி மற்றும் நல்லூர் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் இ.ஜெயகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.








# மதுரை சுற்றுலா ரயில் விபத்தில் 9 பேர் பலி சிலிண்டர் வெடித்ததே காரணம் என தகவல்

மதுரையில் இன்று அதிகாலை சுற்றுலா ரயிலில் தீப்பற்றியதில் 9 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர்.

ரயிலில் பயணிகள் சட்டவிரோதமாக சமையல் எரிவாயு சிலிண்டரை கொண்டு சென்றமையே விபத்துக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்கள் அனைவரும் உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களில் 3 பெண்கள், 4 ஆண்கள் மற்றும் ஒருவர் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் 17 ஆம் திகதி உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் இருந்து ஆன்மிகப் பயணமாக 60 இற்கும் மேற்பட்டோர் அடங்கிய குழுவினர் தமிழகம் சென்றுள்ளனர். இவர்கள் ராமேஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு புனித தலங்களுக்கும் சென்றுள்ளனர். கடைசியாக நேற்று நாகர்கோவிலில் உள்ள பத்மநாபசுவாமி கோயிலில் தரிசனம் செய்துவிட்டு இன்று அதிகாலை 3.45 மணியளவில் மதுரைக்கு சென்றுள்ளனர்.

புணலூரில் இருந்துவந்த ரயில் மூலம் அவர்கள் மதுரைக்கு சென்றுள்ளனர். அவர்கள் சென்ற இரண்டு ரயில் பெட்டிகள் தனியாகப் பிரிக்கப்பட்ட மதுரை ரயில்வே சந்திப்பில் இருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. கனெக்டிங் ரயில் மூலமாக நாளை சென்னை செல்லவிருந்தனர்.

இந்த நிலையில் இன்று அதிகாலை 5.15 மணியளவில் ரயிலில் தீப்பிடித்துள்ளது. ரயிலில் இருந்த பயணிகள் சிலிண்டர் பயன்படுத்தி சமைத்துள்ளனர். அப்போது சிலிண்டர் வெடித்து தீ பிடித்துள்ளது. தீ வேகமாக பரவ ரயில் பயணிகள் அலறியடித்துக் கொண்டு வெளியேறியுள்ளனர். 55 பேர் உயிர் தப்பியுள்ளனர்.

சமையல் செய்வதற்காக ரயில் பெட்டியின் ஒருபுறம் உள்ள கதவில் உள்புறம் தாழிடப்பட்டிருந்த நிலையில் பயணிகள் அனைவரும் ஒரே பக்கத்தில் வெளியேறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால் தீயில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயங்களுடன் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தீயணைப்பு வீரர்கள் சுமார் 2 மணி நேரப் போராட்டத்துக்குப் பின்னர் தீ முழுவதுமாக அணைக்கப்பட்டது.

விபத்து இடம்பெற்ற பகுதியில் தமிழக அமைச்சர் மூர்த்தி நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

## இந்திய நிலம் சீனாவால் ஆக்கிரமிப்பு: மோடி பொய் கூறுகிறார் என ராகுல் தெரிவிப்பு

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை ஒற்றுமை நடைப் பயணத்தைத் தொடர்ந்து, ராகுல் காந்தி மேலும் சில பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு வருகிறார்.

ஜம்மு-காஷ்மீரிலுள்ள லடாக் பகுதிக்கு சென்றுள்ள அவர் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி வருகிறார். இதைத் தொடர்ந்து நேற்று லடாக்கின் கார்கில் பகுதியில் நடைபெற்ற மிகப்பெரிய பொதுக்கூட்டம் ஒன்றில் ராகுல் காந்தி பங்கேற்றார்.

இதன்போது உரையாற்றிய அவர், நாட்டின் ஓர் அங்குல நிலத்தைக் கூட யாரும் எடுக்கவில்லை, ஆக்கிரமிக்கவில்லை என்று பிரதமர் மோடி சொன்னது பொய். நம் நாட்டின் நிலத்தை சீனா ஆக்கிரமிப்பு செய்திருப்பது லடாக்கில் உள்ள அனைவருக்கும் தெரியும்.

பிரதமர் மோடி உண்மையைச் சொல்லவில்லை என்பதும் அனைவருக்கும் தெரியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸார் எடுத்த புகைப்படத்தில் டொனால்டு ட்ரம்ப் அழகாக இருக்கிறார்!

## - அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கருத்து

பொலிஸார் எடுத்த புகைப்படத்தில் டொனால்டு ட்ரம்ப் அழகாக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கருத்து தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு தெற்கு மாகாணமான ஜோர்ஜியாவின் தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயன்றதற்காக, தேர்தல் மோசடி குற்றச்சாட்டின் பேரில் அட்லாண்டா கோர்ட்டில் ட்ரம்ப் கைது செய்யப்பட்டார். இரண்டு லட்சம் அமெரிக்க டொலர்கள் உத்தரவாதத்தின் பேரில் பொலிஸார் சில நிமிடங்களில் ட்ரம்ப்பை பிணையில் விடுவித்தனர்.

ஜோர்ஜியா தேர்தல் மோசடி வழக்கில் ட்ரம்ப் 13 குற்றச் செயல்களை எதிர்கொள்கிறார். இதே தேர்தல் மோசடியில் 18 பேர் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

தனது கைது குறித்து ட்ரம்ப் வெளியிட்டுள்ள பதிவில், இது அமெரிக்காவில் இன்னொரு சோகமான நாள் என்று குறிப்பிட்டுள்ளார்.



மேலும் தன்னை பொலிஸார் எடுத்த புகைப்படத்தை டுவிட்டரில் வெளியிட்டிருந்தார். இது இணையத்தில் வைரலாக பரவியது.

இந்த நிலையில், ட்ரம்ப்பின் புகைப்படம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் கருத்து கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், ட்ரம்ப் மிகவும் அழகான நபர் என்று பதிலளித்துவிட்டு சென்றுள்ளார்.

## வெளிநாட்டு தூதுவர்களுக்கு 48 மணிநேர அவகாசம்!

நைஜரில் உள்ள பிரான்ஸ், ஜேர்மன், அமெரிக்கா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு நைஜர் இராணுவ ஆட்சியாளர்கள் 48 மணிநேரம் கால அவகாசம் வழங்கியுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் நைஜரின் ஆட்சியை அந்த நாட்டு இராணுவத்தினர் கைப்பற்றினர்.

இந்தநிலையில் சதித்திட்டத்தை மாற்றியமைப்பதற்காக மேற்காப்பிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகத்தினர் இராணுவ அச்சுறுத்தலை விடுத்தமையை அடுத்து அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் பிரான்ஸ் தூதுவருக்கு எதிரான இறுதி எச்சரிக்கையை பிரான்ஸ் அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அத்துடன் இராணுவ ஆட்சியாளர்களின் அதிகாரத்தை அங்கீகரிக்கவில்லை எனவும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட துருப்பினர் நைஜரில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மடகாஸ்கர் மைதானத்தில் நெரிசல்: 12 பேர் உயிரிழப்பு, 80 பேர் படுகாயம்




மடகாஸ்கரில் உள்ள ஒரு மைதானத்திற்குள் ரசிகர்கள் நுழைய முயன்றதால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர். 80 பேர் காயமடைந்துள்ளனர்.


கிழக்கு ஆபிரிக்க நாடான மடகாஸ்கரில் உள்ள அன்டனானரிவோவில் இந்திய பெருங்கடல் தீவு விளையாட்டுகளின் தொடக்க விழா நேற்று ஆரம்பமானது. மடகாஸ்கர் தேசிய மைதானத்தில் நடைபெற்ற இந்த விழாவைக் காண ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மைதானத்தின் நுழைவாயிலில் குவிந்திருந்தனர்.

திடீரென ரசிகர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் மைதானத்துக்குள் நுழைய முயன்றதால் அங்கு கடும் நெரிசல் ஏற்பட்டது. மைதானத்தின் காவலாளிகளால் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த நெரிசலில் சிக்கி 12 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 80 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

சிகிச்சை பெற்று வருபவர்களின் 11 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என தெரிவிக் கப்படுகிறது.

உயிரிழந்தவர்களுக்கான மௌன அஞ்சலியுடன் இந்திய பெருங்கடல் தீவு விளையாட்டுகளின் தொடக்க விழா தொடர்ந்து நடைபெற்றது.

இதேவேளை, 2019 ஆம் ஆண்டு மடகாஸ்கரின் மகாமசினா மைதானத்தில் இதேபோன்ற நெரிசலில் 15 பேர் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949